வாசிக்க: மத்தேயு 18:21-35

***"ஞானியின் வாய்மொழிகள் தயவுள்ளவை" (பிர 10:12அ)***

"அன்பு நீடிய பொறுமையுள்ளது" என்ற கூற்றை அடுத்து உடனே பவுலடியார் சொன்னது, "அன்பு தயவுள்ளது" என்பதாகும் (1 கொரி 13:4அ). திருத்தொண்டரின் அடையாளங்களின் பட்டியலிலும் "தயவு" என்பதை அவர் "பொறுமைக்கு" அடுத்துக் குறிப்பிடுகிறார் (2 கொரி 6:6). ஆவியின் கனிகள் பட்டியலிலும் "பொறுமையை" அடுத்துத் "தயவு" வருகிறது (கலா 5:22). தயவு என்பது ஊமையர் பேசக்கூடியதும் செவிடர் கேட்கக்கூடியதுமான மொழி.

இரக்கச் செயல்களைத் திருமுழுக்கினன் யோவான் "மனந்திரும்புதலின் கனி களுக்கு" ஒப்பிடுகிறான். மக்களைப் பார்த்து, "இல்லாதோர்க்குக் கொடுங்கள்" என்றான். வரிக்காரரைப் பார்த்து, "அளவுக்குமீறி வரி பிடுங்காதீர்கள்" என்றான். காவலரைப் பார்த்து, "பொய்க்குற்றம் சாட்டாதீர்கள்" என்றான் (லூக் 3:8-14). விண்ணகத் தந்தைக்கு ஒருவன் செய்யக்கூடிய மிகப்பெருந்தொண்டு அவரது பிள்ளைகளிடம் தயவாயிருப்பதே! "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்" என்றார் இயேசு (லூக் 6:36). நம்மிடம் இரக்கம் காட்டுபவர்களுக்கு மட்டுமல்ல, தயவில்லாதவர்களுக்கும் நாம் தயவு காட்டவேண்டும். இங்குதான் பொறுமைக்குச் சவால் வருகிறது.

இரக்கமற்றதொரு கடன்காரனைப்பற்றி இயேசு சொன்ன கதை நம்மை நாணச் செய்து எச்சரிக்கிறது. அரசனைப் பார்த்து அவனிடம் கடன் வாங்கியவன், "என் மேல் பொறுமையாயிரும்" என்று கெஞ்சியபோது, கோடிக்கணக்கான அவனது கடன் அப்படியே மன்னிக்கப்பட்டுவிட்டது. அதே கடனாளி தன்னிடத்தில் ஒரு சில ஆயிரங்களே கடன்பட்டு, "என்னிடம் பொறுமையாயிரும்" என்று புலம்பிய உடன் வேலையாளையோ கழுத்தை நெறித்தான். "கடவுள் நம்மிடம் தயவாய் இருப்பதுபோல நாமும் பிறரிடம் தயவாய் இருக்கக்கூடாதா" என்ற படிப்பினையில் இக்கதை முடிகிறது (மத் 18:21-35). கனிவிரக்கமின்றி நடத்திய தன் சகோதரர்களுக்குத் தயவு காட்டிய யோசேப்பு நமக்கு முன்மாதிரியன்றோ? (ஆதி 50:21).

கனிவாய்ப் பேசுவது கற்கவேண்டியதொரு கலை. இவ்வுலகில் மனவேதனை இல்லாதவர் ஒருவருமில்லை. கனிவான வார்த்தை மருந்துபோன்றது. நீங்கள் இதுவரை பேசியுள்ள கனிவான வார்த்தை ஒவ்வொன்றிற்கும் ரூ. 10/– கொடுத்து, ஒவ்வொரு கடினமான வார்த்தைக்கும் ரூ. 5/– வசூலித்துக்கொண்டால், நீங்கள் செல்வந்தராயிருப்பீர்களா, தரித்திரராயிருப்பீர்களா? கனிவான வார்த்தைகள் பேசினால் கனிவான வார்த்தைகள் எதிரொலிக்கும்!

இரக்கம் இரக்கத்தைப் பிறப்பிக்கும்; ஆனால் உங்கள் இரக்கத்திற்குச் சாதக மான பிரதிபலிப்பு வரவில்லையென்றால் பொறுமையாயிருங்கள். இரக்கமற்ற காரியங்களைச் சீக்கிரம் மறந்துவிடுங்கள். இரு காரியங்கள் பாறைபோல் நிற்கு மாம்: ஒன்று, அடுத்தவரின் துன்பத்தில் தயவு; அடுத்தது, தனது துன்பத்தில் தைரியம். தயவு என்பது பனியைப்போல; அது மூடுவதையெல்லாம் அழகாக்கும்!

கனிவும் தயவும் ஆடவரைவிடப் பெண்டிருக்கு இயல்பாகவே அதிகம். அகில வுலகப் பெண்கள் தினமாகிய இன்று பெண்குலத்தை வாழ்த்திப் பாராட்டுகிறோம்!